24

# நோக்கியும் நோக்காதும் போல்

செந்தமிழ் வானிலே செங்கதிர் பாரிக்கும் சீர்மிகு பகலவனாய்த் திகழ்கின்றது சீறாவென்னும் மாறாப் புகழ் வளர் பெருங்காப்பியம். எத்திசையும் புகழ் மணக்கும் இவ்வினிய நூலை இயற்றியருளிய மாதவச் செல்வர் உமறுப்புலவர் என்னும் ஓங்கிய சீர்த்தியின் உயர்ந்த நாவலராவர்.

இப்புலவர் கோமான் ஐவகை இலக்கணங்களையும் ஐயந்திரிபறக் கற்று ஆன்றோர் அருளொடு தெய்வ பக்தியும் அரும் பொருள் தெளிவோடு, நிலைத்த உறுதிச் சிந்தையும் வாய்ந்த சான்றோர் ஆவர்.

சீறா கூறும் சீரிய சரிதை மாநிலத்துக்கே ஒரு மாநிதியாய் வந்த செம்மல், வேத நூல் புகழும் வீறு வாய்ந்த வேந்தர் ஆகிய நபிகள் கோமானின் நற்சரிதையாகும். இச்சரிதையை ஓத ஓத மெய்ஞ்ஞான போதங்கள் யாவும் ஓதுவாருள்ளத்தூறிக் கொண்டேயிருக்கும் என்பது ஒருதலை.

செந்தமிழ் மரபிற் சிறிதும் வழுவாது நூல் செய்யப் போந்தார் உமறுப்புலவர். அதே நேரத்தில் சீரிய இஸ்லாத்தின் துய்ய மரபினையும் செம்மையாய்ப் பேணவேண்டிய பெருங்கடப்பாடு அவரைச் சூழ்ந்தது. இவ்விரு மரபினையும் பேணுவதில் அவர் அடைந்த வெற்றியே இன்று அவரை ஒரு உத்தமப் புலவராய் உயர்த்தியுள்ளது. இச்செய்யுள் நூலை இயற்றிய காலத்தில் வழக்கிலிருந்த ஆன்றோர் நூல்கள் யாவற்றையும் அவர் கற்றிருந்தார். அவ்வான்றோர் மரபுகளை முற்றிலுந் தழுவியுள்ளார். இரு பெரு மரபுகளையும் அவர் பேணியுள்ளமைக்குச் சிறந்த சான்றுகள் பல சீறாப் பெருங்காப்பியம் முழுவதிலும் விரவி மிளிர்கின்றன.

வடமொழியிலே இராம கதையை வகுத்து வான்புகழ் கொண்டவர் வான்மீகி முனிவர். இராமனும் சீதையும் திருமணத்தின் முன்னர் ஒருவரையொருவர் கண்டு கழிபெருங் காதல் கொண்டதாய் அவர் கூறவில்லை.

ஆயின், இராம கதையைத் தமிழ் செய்ய வந்த கம்ப நாடர் இனிய தமிழ் மரபினைத் தழுவி, தலைவனும் தலைவியும் திருமணத்தின் முன்னர் ஒருவரையொருவர் கண்டு கழிபெருங்காதல் கொண்டதாகக் கற்பனை செய்துள்ளார். தமிழியற் கொப்ப அவர் அவ்வாறு கூறியமை - முதனூலுக்கு மாறுகொள்ளக் கூறியமை - வழுவாகாது. மரபெனவே கொள்ளப்படுகின்றது.

கௌசிகர் முன்னும் இலக்குவன் பின்னும் வர இராமன் மிதிலை நகருட் செல்கின்றான். மேல் மாடியிலே பெண்ணலங்கனிய நிற்கின்றாள் பிராட்டி, இருவர் கண்களும் ஒன்றையொன்று கவ்வி உண்டு கலக்கின்றன. உணர்வும் கலக்கின்றது. இருவரும் ஒருவர் உள்ளத்து மற்றையவர் மாறிப்புகுகின்றனர்.

“எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணினை கௌவி ஒன்றை யொன்று
உண்ணவும் நிலைபெறா துணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்”

பிராட்டி நோக்கிய நோக்காகிய கூரிய வேலாயுதங்கள் வீரனின் புயவரைகளிற் சென்று பதிகின்றன. வீரத்திருமகனின் கண்களோ திருமகளின் தனபாரங்களிற் சென்று தைக்கின்றன. இங்ஙனம் தன் கற்பனையை வளரவிட்ட கம்பர் தலைமக்களின் உள்ளத்துணர்ச்சியை செம்மையாய்ப் படம் பிடித்துக் காட்டுகின்றார். அவருடைய கூற்றுக்கள் சங்கத்துச் சான்றோர் காலந்தொட்டு அகப்பொருட்டுறையை எடுத்தோதி வந்த புலவர் மரபினைப் பின்பற்றியனவேயாகும். இனி, தமிழிலக்கிய மரபையொட்டி நூல்செய்ய வந்த உமறுப்புலவர் தலைமக்கள்தம் காதற் பாங்கினையுங் கூறவேண்டியது மரபன்றோ.

ஆயின், இஸ்லாமியத் திருமரபைப் பேணும் பெரியோர்கள் கற்பியலையேயன்றிக் களவியலை அனுமதியார். திருமணத்தின் முன் தலைவனும் தலைவியும் தனிமையிற் கூடி அளவளாவுதலையோ அவர் தம் கூட்டத்தையோ அனுமதியார். ஆயினும் மணமக்கள் திருமணத்திற்கு முன்னர் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வதற்குத் தடையில்லை. எனினும் பெண்மையின் பூரணப் பொலிவினை வெளிக்காட்டும் தோற்றங்களைக் காணவோ நுகரவோ தடையுண்டு.

‘வீக்கிய கணைகழல் வீரன் செங்கணும்
தாக்கணங் கனையவள் தனத்திற் தைத்தவே’

எனக் கம்பர் கூறியது போலக் கற்பனை செய்து கூறும் சுதந்திரம் இஸ்லாமியப் புலவருக்கு மறுக்கப்படுகின்றது. அதுவும் மாசற்ற தூய ஒழுக்கங்களின் பாதுகாவலராய்த் தோன்றிய மாநபிமீது அத்தகைய கற்பனையொன்றைப் புனைய அவரால் முடியாது.

இப்பொழுது உமறுப் புலவரின் நிலையைப் பாருங்கள், தமது காப்பியத்தினுள் தலைமக்களின் காதற்பாங்கினைத் தமிழ் மரபின்படி சித்திரித்தலும் வேண்டும். அஃது இஸ்லாமிய மரபினின்று பிறழாதிருத்தலும் வேண்டும். புலவரின் நிலை இருதலைக் கொள்ளி எறும்புதான்.

எனவே இருமரபுக்கு மொத்ததாய் ஒரு புதுவழியைக் கண்டார் புலவர். எம்பெருமானார் இளைஞராய் இருந்த ஞான்று, கதீஜாப்பிராட்டியைச் சந்தித்த முதற் சந்திப்பொன்றைக் கம்பனைப் போலவே கற்பனை செய்கின்றார் கவிஞர்.

கதீஜாப்பிராட்டியிடம் பொருள் பெற்று வாணிபம் செய்து வருகின்றனர் மக்கமாநகரத்து வணிகப்பெருமக்கள். அவ்வணிகர் குலப் பெருமாட்டியின் இல்லத்துக்கு ஒரு நாள் எமது வாலிபர் வள்ளல் முகம்மது அழைக்கப்படுகின்றனர்.

சித்திர வனப்பு வாய்ந்த அச்செம்மல், பிராட்டியாலிடப்பட்ட முத்தணி நிரைத்த பீடத்தில் அமர்கின்றனர். அவ்வேளை பெருமானாரின் பேரொளி பரப்பிப் பொங்கிப் பெருகிய அழகு வெள்ளத்தில் பிராட்டியின் கூருடைக் கரியவாட் கண்களாகிய கயல்கள் நீந்திக் குளிக்கின்றன. அப்பொழுது நங்கை நல்லாள்‘மனமெனு மத்தயானையின் நிறையெனும் அங்குசம் நிமிர்ந்து’ போகாதவாறு தம்மைத் தாமே காக்கின்றார். நாணெனும் போர்வை போர்த்துக் கற்பெனும் வேலிகோலித் தமது அவாவினைக்



இலவச விநியோகத்திற்காக

காத்தார். காமநோயை வெளிவிடாது அகத்துள் அமைத்தார். ஆயினும் தமது உள்ளத்தைப் பறிகொடுத்து அதனைக்காணாது வருந்தி மயங்கினார். இவ்வாறு தலைமகளின் காதற்பாங்கினை, உள்ளத்துணர்ச்சியை இனிமை மீதூரக் கூறுகின்றார். கவிஞர்.

இனி, மாசற்ற சீல வாழ்விற்கே ஒரு முன்மாதிரியாய்த் தோன்றிய மாநபி, ஒழுக்க சீலங்களை உலகிற்பரப்பி அவற்றைக் காத்தற்கென்றே தோன்றிய காவலர் ஆகிய தலமகனாரின் நிலைமையைக் காண்போம்.

பிராட்டியை அவர் ஏறிட்டு நோக்கினாரென்றோ, அங்கங்களில் தம் கண்களைத் தைக்கவிட்டாரென்றோ ஈண்டுப் புலவர் கூறிற்றிலர். அங்ஙனம் அவர் கூறுதல் இயலாது. கூறினால் அக்கற்பனையை இஸ்லாமியத் திருமரபு ஏற்காது இழுக்கெனக் கொள்ளும். எனவே மிக்க அவதானத்துடன் பெருமானாரின் நிலையைச் சித்திரிக்கிறார்.

"காக்குதற் குதித்த வள்ளல் காரிகை வடிவைக் கண்ணால்
நோக்கியும் நோக்காதும் போல் நொடியினில் எழுந்தமாதின்
மாக்கடலனைய கண்ணும் மனமும் பின்தொடர்ந்து செல்லக்
கோக்குல விதி நீந்திக் கொழு மனையிடத்திற் சார்ந்தார்.

உலகைத் தீநெறிகளினின்று விலக்கி நன்னெறி உய்த்துப் புரத்தற்கென்றே தோன்றிய அருள் வள்ளலாய பெருமானார் "காக்குதற்குதித்த வள்ளல்" என்று ஈண்டுக் கூறியுள்ள திறம் நயத்திற்குரியது. இச்சந்தர்ப்பத்திலும் இளமைப் பருவத்தின் அடக்கவியலாப் பண்புகளின் மத்தியிலும் செந்நெறிதவறாத செம்மல் அவர் என்பதை அத்தொடர் ஈண்டு வலியுறுத்துதல் இன்பந்தருவதாகும்.

அத்தயை வள்ளல் நமக்கு முன்னர் தோன்றும் காரிகையை, தமக்கு உரியளல்லளாய ஒருத்தியை எங்ஙனம் ஏறிட்டுப்பார்க்க ஒருப்படுவர்? பெண்மையின் அங்கங்களில் எங்ஙனம் தமது பார்வையைச் செலுத்தித் தைக்கவிடுவர்? எனவேதான் கவிஞர் 'காரிகை வடிவைக் கண்ணால் நோக்கியும் நோக்காதும் போல்' என்று மிக செம்மையாக, சாதுரியமாக, நாகரிகமாகக் கூறுகிறார். மேலும் 'நொடியினில் எழுந்து' என்று கூறியதனாற் சற்றேனும் தாமதியாது விரைவில் அவ்விடத்தை விட்டு எழுந்து போக எண்ணிய பெருமானின் நாணப் பண்பு எமக்கு நனிபெரும் விருந்தாய் அமைகின்றது. ஆயின், அம்மாதரசியின் மனமும் கண்ணும் தம்மைத் தொடர்வதை அவரால் என்ன செய்யமுடியும்? அதுபால்வரை தெய்வத்தின் விதிபோலும்!

நோக்கியும் நோக்காதும் போல் நொடியினில் அவ்விடத்தை விட்டு அகல்கின்றனர் அண்ணல். ஆயினும் உள்ளத்துக் காதல் தோன்றுகின்றது. அதனை வெளிப்படுத்தாது தம்மையே தடுத்தாட் கொள்கின்றனர்.

**"ஒண்ணுதற் கோஓ வுடைந்ததே ஞாட்பினுள்**
**நண்ணாரும் உட்குமென் பீடு"**



இலவச விநியோகத்திற்காக

என்று அவர்கள் வாய்விட்டுக் கூறாவிடினும் உள்ளமோ அம்மங்கை நல்லாள் உறையும் உறையுளாயிற்று.

"படியினிற் சசியும் செங்கேழ்ப் பரிதியு நிகரொவ்வாத
வடிவெடுத் தனைய வள்ளன் முகம்மதின் நெஞ்சமென்னுங்
கடிகமழ் வாவியூடு கருத்தெனுங் கமல நாப்பண்
படிநடைக் கதீசாவென்னும் பெடையன முறைந்ததன்றே"

என்று அழகொளிரக் கூறுகின்றார் உமறுப்புலவர். இவர் இங்ஙனம் தலைவன் தலைவியரிடையே நிகழும் உள்ளத்து ஒருமைப்பாட்டினைத் தமிழ் மரபிற்கியையச் சிறப்பாய் எடுத்து விளக்கியமையைக் கண்டோம். அதேவேளையில் தலைமக்கள் பெயருக்கு இஸ்லாமியத் திருமரபு கூறும் இழுக்கும் வந்திடாது பாதுகாத்துள்ளார்.

இவ்வாறு சீறாப்புராணமெங்கும் மல்கிப் பரந்துள்ள இரு மரபுக்குமொத்த இலக்கிய வழக்குகள் இனிமை மீதூரப் படித்தற்கும் உமறுப்புலவர் கோமானின் திவ்விய சதுரப்பாட்டினை அறிந்து அகம்மகிழ்தற்கும் உரியனவாய் அமைந்துள்ளன. இவற்றைத் துருவிக் கற்றுச் செந்தமிழின் தீஞ்சுவையும், இஸ்லாத்தின் இன்சுவைப் போதங்களையும் ஒருங்கேயடைந்து இன்புறுவோமாக.

- ஜே. எம். எம். அப்துல்காதிர்
'இலக்கிய இன்பம்'


இலவச விநியோகத்திற்காக